# அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
# திட்டமலை, நம்பியூர் – 638458

நாட்காட்டி 2020 - 2021

மாணவரின் பெயர் :

பிறந்த தேதி :

வகுப்பு / பாடம் :

பிரிவு, பயிற்று மொழி :

சுழல் எண் :

பயிலும் காலம் :

பல்கலைக் கழகப் பதிவு எண் :

ஆதார் எண் :

இரத்த வகை :

கல்லூரி நிறுவனம் : தமிழக அரசு கல்லூரிக் கல்வித் துறை

கல்லூரித் தொலைபேசி எண் : 04285- 269600

கல்லூரி உள்நாட்டுத் தொலைபேசித் தொடர் எண் : 04285

கல்லூரி மின் நகல் அஞ்சல் எண் : 269600

கல்லூரி மின்னஞ்சல் : thittamalaigasc @ gmail

கல்லூரி முதல்வரின் பெயர் : முனைவர் இரா. சீனிவாசன்

குழு உறுப்பினர்கள்

1. முனைவர் ஈ. தமிழ்மணி M.Sc., M.Phil., M.Ed., PGDCA., M.Phil., (Education) Ph. D,
2. முனைவர் ஆ. நாகேந்திரன் M.Com., M.Phil., PGDCA., MBA., Ph. D,
3. திரு த. வரதராஜன் MCA.,M.Phil., SET.

உள்ளடக்கம்


1. தேசிய கீதம்
2. தமிழ்த்தாய் வாழ்த்து
3. உறுதிமொழி
4. கல்லூரி வரலாறு
5. கற்பிக்கப்படும் பாடங்கள்
6. கல்லூரி ஆசிரியர்கள்
7. கல்லூரி அலுவலர்கள்

8. கட்டண விதிமுறைகள்

9. வருகைப் பதிவும் விடுப்பும்

10. விடுப்பு விண்ணப்பம்

11. கட்டுப்பாட்டு விதிகள்

12. நேரடித் தொடர்பு முறை

13. உடற்பயிற்சிக் கல்வி

14. நூலகம்

15. கல்லூரிப் பேரவை

16. மருத்துவ ஆய்வு

17. நாட்டு நலப்பணித் திட்டம்

18. செஞ்சுருள் சங்கம்

19. இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்

20. வேலை வாய்ப்புத் தகவல் மையம்

21. முன்னாள் மாணவர் கழகம்

22. பெற்றோர் ஆசிரியர் கழகம்

23. நாட்காட்டி 2020 -2021

2 நாட்டுப் பண்

ஜன கண மன அதிநாயக ஜெய ஹே
பாரத பாக்ய விதாதா.
பஞ்சாப சிந்து குஜராத மராத்தா
திராவிட உத்கல வங்கா.
விந்திய இமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா.
தவ சுப நாமே ஜாகே,
தவ சுப ஆஷிஷ மாகே,
ஜாஹே தவ ஜெய காதா.
ஜன கண மங்கள தாயக ஜெயஹே
பாரத பாக்ய விதாதா.
ஜெய ஹே, ஜெய ஹே, ஜெய ஹே,
ஜெய ஜெய ஜெய, ஜெய ஹே. - மகாகவி இரவீந்திரநாத் தாகூர்

தமிழ்த்தாய் வாழ்த்து
நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெருந் தமிழணங்கே
உன் சீரிளமைத் திறம் வியந்து செயல்மறந்து
வாழ்த்துதுமே வாழ்த்துதுமே வாழ்த்துதுமே
- பேராசிரியர் மனோன்மணியம் பெ. சுந்தரம்பிள்ளை

உறுதிமொழி

எனது பெற்றோர் திரு/திருமதி................................ இவர்களது மகன்/ மகளாகிய நான் கல்லூரியின் விதிமுறைகளுக்கு உட்பட்டு உலகப் பொதுமறைகளுக்கு உட்பட்டு நல்ல குணம் பண்புகள் மற்றும் பழக்கவழக்கங்களை வளர்த்துக் கொள்வேன்.

மாணவப் பருவத்தில் என்னை முழமையான மனிதனாக வளர்த்து மனித நேயத்துடன் வாழ கல்லூரியில் நடைபெறும் அனைத்து தொடர் நிகழ்வுகளிலும் ஈடுபட்டு முன்னேற்றப் பாதையில் செல்வேன். பாடங்களைக் கற்றுத்தரும் ஆசிரியர்களிடம் மரியாதையுடன் நடந்து அறிவைப் பெருக்கிப் பயிற்சி செய்து முன்னேற்றமடைய தகுதியைப் பெற்றுக் கொள்ள ஈடுபாட்டுடன் நேரத்தைப் பயன்படுத்தி நற்பாதையில் செல்வேன். தொலைக்காட்சி, அலைபேசி போன்றவற்றைச் சரியான தேவைகளுக்குச் சுயக் கட்டுப்பாட்டுடன் பயன்படுத்துவேன்.

மேலும், மாணவப் பருவ உணர்வுகளைக் கட்டுப்படுத்தி வரைமுறைகளோடும் சகோதரத்துவ உணர்வுகளோடும் நல்ல உறவுமுறையைச் சமுதாயத்தில் நிலைநாட்டி எய்ட்ஸ் இல்லா உலகத்திற்கு எனது பங்களிப்போடு பிறருக்கு எடுத்துக்காட்டாக வாழ்வேன் என்றும் உறுதி அளிக்கிறேன்.

தீண்டாமை எதிர்ப்பு உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால் இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்திய குடிமகனாகிய நான் நமது அரசியல் அமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு எவர்மீதும் வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைப்பிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமாற உறுதி அளிக்கிறேன்.

அரசியல் அமைப்பின் அடிப்படைக் கருத்திற்கு இணங்கிச் சாதி, சமய வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும்.

மேலும், தீண்டத் தகாதவர்கள் என்ற கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்களிடையே காணப்படும் தீண்டாமை உணர்வைப் போக்குவதும் நமது சமூகக் கடமை ஆகும்.

வாக்காளர் உறுதிமொழி

ஜனநாயகத்தின்மீது இணங்கி நடக்கும் நம்பிக்கையுடைய இந்திய குடிமக்களாகிய நாம், நம் நாட்டின் ஜனநாயக மரபுகளையும், சுதந்திரமான, நியாயமான மற்றும் அமைதியான தேர்தல்களின் மாண்பையும் நிலை நிறுத்துவோம் என்றும், மேலும் ஒவ்வொரு தேர்தலிலும் அச்சமின்றியும், மதம், இனம், சாதி, வகுப்பு, மொழி ஆகியவற்றின் தாக்கங்களுக்கு ஆட்படாமலும் அல்லது எந்தவொரு தூண்டுதலும் இன்றியும் வாக்களிப்போம் என்றும் உறுதியளிக்கிறோம்.

MISSION

Upliftment of the downtrodden and the weaker section of the people in the society, to provide quality education, valuebased education and awareness of the soeiety so as to develop individuality, personality and empowerment of the students to meet the challenges in all walks of life and be a good citizen.

VISION

Progressive changes in behaviour and sustainable developement.

கல்லூரி வரலாறு

ஈரோடு மாவட்டம், நம்பியூர் வட்டம், திட்டமலையில் 2017-18ஆம் கல்வி ஆண்டில் அரசாணை எண் 199இன் படி 4.8.2017 அன்று தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு கே.ஏ. செங்கோட்டையன் அவர்களால் அரசு கலை அறிவியல் கல்லூரி துவக்கி வைக்கப்பட்டது. அவ்விழாவிற்குத் தமிழ்நாடு அரசு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு K.C. கருப்பணன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். பாரதியார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ஆ. கணபதி அவர்கள் விண்ணப்பங்கள் வழங்கிச் சிறப்புரை ஆற்றினார். அவ்விழாவில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பங்கேற்றார்கள்.

இக்கல்லூரியில் 2017-18ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட பாடப்பிரிவுகள் 5.

பி.ஏ. (தமிழ்)
பி. ஏ. (ஆங்கிலம்)
பி.எஸ்.சி. (கணிதம்)
பி.எஸ்.சி. (கணினி அறிவியல்)
பி.காம். (வணிகவியல்)

2019ஆம் ஆண்டில் கூடுதலாக

பி.ஏ. பொருளாதாரம்
பி.ஏ. வரலாறு
பி.பி.ஏ.

ஆகிய மூன்று பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்டன.

6.09.2017 அன்று 120 மாணவர்களுடன் கல்லூரி செயல்படத் தொடங்கியது. 2018-19ஆம் கல்வி ஆண்டில் 230 மாணவர்கள் சேர்ந்து பயின்று வருகின்றார்கள். 2019-20ஆம் கல்வி ஆண்டில் 265 மாணவர்கள் சேந்துள்ளனர். 2020-2021ஆம் கல்வி ஆண்டில் 230 மாணவர்கள் சேர்ந்துள்ளனர்.

அனைத்துப் பாடப்பிரிவுகளிலும் ஆங்கிலப் பயிற்றுமொழியில் வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இக்கல்லூரி நம்பியூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள சிற்றூர்களில் இருந்து வரும் மாணவர்களுக்கு உயர்கல்வி அளித்துச் சேவை புரிவதற்காகத் தொடங்கப்பட்டது. அந்தக் குறிக்கோளைச் செவ்வனே நிறைவேற்றி வருகிறது.

கற்பிக்கப்படும் பாடங்கள்

இளநிலை பாடப்பிரிவுகள்

பகுதி- 1 தமிழ்
பகுதி- 2 ஆங்கிலம்
பகுதி- 3 முதன்மைப் பாடப்பிரிவு

கல்லூரி ஆசிரியர்கள்

முதல்வர்

முனைவர் இரா. சீனிவாசன், M.A., M.Phil., M.Ed., PGDCA., P.hd., Dip. Folklore.
Dip. in Kannada. Dip. in Telugu. Cert. in Comp. Litt.

தமிழ்த்துறை : 1 காலிப்பணியிடங்கள் - 5

ஆங்கிலத்துறை : 1 காலிப்பணியிடங்கள் - 5

கணிதத்துறை:
முனைவர் ஈ.தமிழ்மணி M.Sc., M.Phil., M.Ed., PGDCA., P.hd.,
உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
2.காலிப்பணியிடங்கள் - 3

கணினி அறிவியல் துறை :
1. திரு த. வரதராஜன் MCA., M.Phil., SET.
உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
2. திருமதி த. தீபலக்ஷ்மி M.Sc., M.Phi.
உதவிப் பேராசிரியர் (மாற்றுப்பணி அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)
3. காலிப்பணியிடங்கள் - 3

வணிகவியல் துறை :
1. முனைவர் ஆ. நாகேந்திரன், M.Com., M.Phil., PGDCA., MBA., Ph.D.,
உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
2. காலிப்பணியிடங்கள் - 3

உடற்கல்வித் துறை :
1. திரு த. வரதராஜன் MCA., M.Phil., SET. (பொறுப்பு)

நூலகர் :

1 காலிப்பணியிடம் - 1

கல்லூரி அலுவலகப் பணியாளர்கள்

1. திருமதி பு. ஜோஸப்பின் ஜெசிந்தா M.A., நிதியாளர்
2. திரு வீ. சண்முகம் M.A., காண்காணிப்பாளர்
3. திரு T. வினோத் B.Sc., உதவியாளர்
4. திரு னி. ஜெயகுமார் M.A.., இளநிலை உதவியாளர்
6. திரு லு.யூ. பழனிச்சாமி BBA.,M.Com. இளநிலை உதவியாளர்
7. திருமதி ம். சங்கீதா கௌரி B.A., B.Ed., தட்டச்சர்
8. உதவியாளர் காலிப்பணியிடம் - 1
9. கனகசபேசன் உதவிசெய்நிரலர்
10. அலுவலக உதவியாளர் காலிப் பணியிடங்கள் - 2
11. இரவு காவலர் காலிப்பணியிடங்கள் - 2
11. பெருக்குபவர் காலிப்பணியிடங்கள் - 4
12. துப்புரவாளர் காலிப்பணியிடம் – 1

செஞ்சுருள் சங்கம்

கல்லூரி முதல்வர் தலைமையில் செஞ்சுருள் சங்கம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. உலகை உலுக்கிக் கொண்டிருக்கும் எய்ட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது இச்சங்கத்தின் முதன்மை நோக்கமாகும். இளநிலை முதலாமாண்டு பயிலும் மாணவர்கள் இச்சங்கத்தில் உறுப்பினராகச் சேர்வதற்குத் தகுதி பெற்றவர்கள்.

இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்

கல்லூரி முதல்வர் தலைமையில் செஞ்சிலுவைச் சங்கம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இளைய சமுதாயத்தினரிடம் சேவை உள்ளத்தையும், மற்றவர்களுக்கு உதவும் குணத்தையும் வளர்ப்பது இச்சங்கத்தின் முக்கிய நோக்கமாகும். இளநிலை முதலாமாண்டு பயிலும் மாணவர்கள் இச்சங்கத்தில் உறுப்பினராகச் சேர்வதற்குத் தகுதி பெற்றவர்கள்.

தொழில் முனைவோர் மற்றும் வேலை வாய்ப்புத் தகவல் மையம்

வேலைவாய்ப்பு தகவல் மையம் கல்லூரி முதல்வர் தலைமையில் இயங்கி வருகிறது.

Behavioural Changes Counsiling Centre

மாணவப் பருவத்தில் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் தடையாக உள்ள நடத்தை, பழக்க வழக்கங்களில் தேவையான (intervention) மாற்றங்களை ஏற்படுத்தி உலகப் பொது மறைகளுடன் இயல்பான வாழ்க்கை மேம்பாடு அடைய உருவாக்கப்பட்டிருக்கிறது.

பெற்றோர் ஆசிரியர் கழகம்

கல்லூரி அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யப் பெற்றோர் ஆசிரியர் கழகம் மாணவர்களின் உதவியுடன் கல்லூரி முதல்வரின் தலைமையில் நடைபெற்று வருகிறது.

நாட்டு நலப்பணித் திட்டம்

இந்திய அரசாங்கத்தின் கல்வி அமைச்சகமும், இளைஞர் கழகமும் இணைந்து நாட்டு நலப்பணித் திட்டம் என்ற அமைப்பை ஏற்படுத்தியுள்ளன. தேசிய உணர்வையும், சமூகப் பணியில் ஆர்வத்தையும் வளர்க்கும் பயிலரங்காக நாட்டு நலப்பணித்திட்ட அமைப்புச் செயல்படுகிறது. பல்கலைக் கழகத்தில் கட்டாயப் பாடமாக நாட்டு நலப்பணித் திட்டம் உள்ளது.

முதலாமாண்டு மாணவர்கள் இதில் சேரத் தகுதி உடையவர்கள். அவர்கள் திட்ட அமைப்பாளர்களின் மேற்பார்வையில் செயல்படுவார்கள். தொண்டர்கள் ஆண்டு தோறும் 120 மணி நேரத்திற்குக் குறையாமல்

கட்டாயமாகத் தங்கள் உழைப்பை நாட்டு நலப்பணிக்காக வழங்க வேண்டும்.ஒவ்வொரு தொண்டரும் அவர் தம் பங்கேற்புக் குறித்துத் திட்ட அலுவலரின் கையொப்பம் பெற்ற நாளேடு ஒன்றினை நடைமுறைப்படுத்த வேண்டும்.

கிராமப்புற வளர்ச்சி, முதியோர் கல்வி, சிறுசேமிப்பு, சமூக நலன், தேசிய நினைவுச் சின்னங்கள் பாதுகாப்பு, சமுதாயப் பொருளாதாரக் கணக்கெடுப்பு, வளாகத் துப்புரவு, சமூக விழிப்புணர்வு முதலிய பல்வேறு பணிகளில் நாட்டு நலப்பணித் தொண்டர்கள் ஆர்வத்துடன் ஈடுபடுகின்றனர்.

தொடர்ந்து ஈராண்டுகள் நாட்டு நலப்பணித்திட்டத் தொண்டராகப் பணிபுரிந்த மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

வெவ்வேறு காலங்களில் அமைக்கப்படும் வேறுபட்ட பயிலரங்க நிகழ்ச்சிகளிலும் சிறப்பு முகாம்களிலும் தொண்டர்கள் கட்டாயமாகக் கலந்துகொள்ள வேண்டும்.

வருகைப் பதிவும் விடுப்பும்

1. மாணவர்கள் கல்லூரிக்கு வருவதில் ஒழுங்கை முழுமையாக்க கடைப்பிடிக்க வேண்டும்.

அ) விடுப்புக்கான விண்ணப்பங்கள் அனைத்தும் முழு விவரத்துடன் பொறுப்பாசிரியரிடம் கொடுக்கப்பட வேண்டும். தவிர்க்க முடியாத காரணத்தால் விடுப்புக்கு முன்கூட்டியே அனுமதி பெறாத மாணவர் கல்லூரிக்குத் திரும்பும் முதல் நாளில் பெற்றோர் / பாதுகாவலர் கையெழுத்துடன் கூடிய விண்ணப்பத்தைக் கொடுத்தல் வேண்டும்.

ஆ) நோய் காரணமாக 3 நாட்களுக்குமேல் விடுப்பு வேண்டும். மாணவர்கள் மருத்துவச் சான்றிதழ் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

2. விடுப்பு விண்ணப்பம் இன்றிக் கல்லூரிக்கு வராதிருப்பது கண்டிக்கத் தக்கது. தண்டனைக்கும் உரியதாகும்.

3. விடுப்பு விண்ணப்பம் பொறுப்பாசிரியரால் அனுமதிக் கையொப்பமிட்டு பரிந்துரைக்கப்படல் வேண்டும்.

4. விடுப்பு விண்ணப்பம் இன்றி ஒரு மணி நேரம் வராதிருப்பின் அது அரை நாள் வராமையாகவும் கருதப்படும்.

5. ஒரு அரைநாளும், ஒரு முழு நாளும் விடுப்பு விண்ணப்பமின்றி வராதிருப்பின் முறையே ஒரு நாள் இரு நாட்கள் வராமையாகவும் கருதப்படும்.

6. கீழ்க்கண்ட விதிகளை மீறி நடந்து கொள்ளும் மாணவர்களுக்கு வருகைப் பதிவுக்குரிய ஆண்டு நற்சான்றிதழ் வழங்கப்பட மாட்டாது.

> அ) ஒரு மாணவர் வகுப்புப் பாடங்களைத் திருப்திகரமாக நிறைவு செய்திருக்க வேண்டும்.
>
> ஆ) கல்லூரி அவ்வாண்டுக்கு நிச்சயித்துள்ள மொத்தப் பணி நாட்களில் நான்கில் மூன்று பங்காவது மாணவர் வருகைப்பதிவு பெற்றிருக்க வேண்டும்.
>
> இ) மாணவர்கள் தேர்ந்தெடுத்த அறிவியல் செயல்முறைப் பகுதிகளைத் திருப்திகரமாக முடித்தல் வேண்டும்.

7. பல்கலைக் கழகத் தேர்வு எழுத கல்லூரியின் மொத்தப் பணி நாட்களில் 75 சதவீத வருகைப் பதிவு திருப்திகரமானதாகக் கருதப்படுகிறது. தவிர்க்க முடியாத காரணங்களால் இந்த அளவு வருகைப் பதிவினை ஒரு மாணவர் பெறமுடியா விட்டால் அம்மாணவர் பல்கலைக்கழகப் பதிவாளருக்கு உரிய கட்டணத்துடன் வேண்டுதல் விண்ணப்பம் அனுப்பினால் அம்மாணவர்க்குப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு தேர்வு எழுத அனுமதி வழங்கும்.

மாதிரி விடுப்பு விண்ணப்பம்

1 மாணவரின் பெயர்

2. வகுப்பும், பிரிவும்

3. தேவைப்படும் விடுப்பு நாட்கள்

4. விடுப்புக்குரிய காரணம்

5. ஏற்கனவே எடுத்துள்ள விடுப்பு

6. மாணவரின் கையொப்பம் (தேதியுடன்)

7. பெற்றோர் /காப்பாளர் கையொப்பம்

8. பொறுப்பாசிரியர் கையொப்பம்

மருத்துவப் பரிசோதனை

முதலாமாண்டு மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

கட்டுப்பாட்டு விதிகள்

1. மாணவர்கள் தூய எளிய உடையில் வர வேண்டும்.

2. காலை வணக்கக் கூட்டத்திற்கு எல்லா மாணவரும் வருகைபுரிதல் அவசியம். முதல்வர் விரும்பினால் காலை வணக்கக் கூட்டத்திற்கு வராத மாணவர்களுக்கு அரை நாள் வருகைப் பதிவைத் தராமல் விடலாம். மாணவர் ஒரு வகுப்பறையிலிருந்து வேறோரு வகுப்பறைக்குச் செல்லும்போது மற்ற வகுப்புகளுக்கு இடையூறு நேராமல் ஓசையின்றிச் செல்ல வேண்டும்.

3. வகுப்புகள், கல்லூரிப் பேரவை முதலிய அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் மாணவர்கள் ஒழுங்காகக் கால தாமதமின்றி வருகை தரல் வேண்டும்.

4. கல்லூரிக்கு முன்கூட்டியே வரும் மாணவர்கள் கல்லூரி வாசலில் கூட்டம் போடாது இருத்தல் வேண்டும்.

5. பணியையும், பண்பையும் விளக்கும் அடையாளமாக மாணவர்கள் ஆசிரியர்களை நாள் தோறும் முதன்முறையாக காணும் போது வணக்கம் செலுத்துதல் வேண்டும்.

6. வகுப்பிற்குத் தாமதமாக வரும் மாணவர்கள் வகுப்பிலுள்ள ஆசிரியரிடம் உள்ளே வர அனுமதி பெற்று வகுப்புக்குள் செல்ல வேண்டும்.

7. கல்லூரிக்குப் பேருந்துகளில் வரும் போதும், திரும்பிச் செல்லும் போதும் ஒழுங்கினைக் கடைப்பிடித்து மற்றவர்களுக்கு முன்மாதிரியாக நடந்துகொள்ள வேண்டும்.

8. மாணவர்கள் கல்லூரிக் கட்டடம், தளவாடங்கள், தோட்டங்கள் முதலிய கல்லூரிச் சொத்துக்களைக் கவனமாகவும், பாதுகாப்பாகவும் வைத்திருக்க வேண்டும்.

9. கல்லூரியில் அல்லது வெளியில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் மாணவர்கள் மதிப்போடு நடந்து கொள்ள வேண்டுமென எதிர்ப்பார்க்கப்படுகின்றது. எந்த ஒரு மாணவரும் கட்சி அரசியல் அல்லது வகுப்பு அரசியலில் பங்கு பெறக்கூடாது. இரண்டாம், மூன்றாமாண்டு மாணவர்கள் முதலாமாண்டு மாணவர்களை நேரடியாகவோ, மறைமுகமாகவோ கேலி, கிண்டல் செய்து அவமானப்படுத்துவதைக் கண்டிப்பாகத் தவிர்த்தல் வேண்டும். இதனை மீறுபவர்கள் கல்லூரியிலிருந்து உடனடியாக வெளியேற்றப்படுவர்.

10. மாணவர்கள் கல்லூரி விதிமுறைகளுக்குப் புறம்பாக நடப்பார்களேயானால் எந்தவித முன்னறிவிப்பும் இன்றிக் கல்லூரியிலிருந்து உடனடியாக நீக்கப்படுவர்.

11. செல்போன் கண்டிப்பாகக் கல்லூரிக்குள் கொண்டு வரக்கூடாது. மீறினால் பறிமுதல் செய்யப்படும், திருப்பித் தரப்படமாட்டாது.

12. அனைத்து வகுப்புக்களுக்கும் பருவத் தேர்வுகளும் மாதிரித் தேர்வுகளும் நடைபெறும். மருத்துவக் காரணங்களாலும்,தவிர்க்க முடியாத சூழல்களிலும் மட்டுமே மாணவர்கள் தேர்வு எழுதும் நிலையிலிருந்து விலக்கு அளிக்கப்படுவர். எந்த ஒரு மாணவரும் தக்க காரணம் இல்லாமல் தேர்வு எழுதாமல் இருக்கக் கூடாது. பொருத்தமான காரணங்கள் இன்றி வகுப்புத் தேர்வு எழுதாமல் இருந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். வகுப்புத் தேர்வும் பருவத் தேர்வுகளும் எழுதிய மாணவர்களின் மதிப்பெண்களைத் தாங்கிய பதிவேடு ஒன்று அந்தந்தத் துறைகளில் பராமரிக்கப்படும்.

நூலகம்

1. கல்லூரி நூலகரின் மேற்பார்வையில் நூலகம் செயல்படும். நூலகரின் அனுமதியின்றி நூல்களை எடுக்கக் கூடாது.

2. கல்லூரியிலுள்ள எல்லா மாணவர்களும், ஆசிரியர்களும் நூலகத்திலிருந்து நூல்களை இரவல் பெற்றுக் கொள்ளலாம்.

3. கல்லூரிப் பணி நாட்களில் காலை 9.00 மணி முதல் 4.00 மணி வரை நூலகம் செயல்படும்.

4. நூலகத்தில் மாணவர்கள் ஒழுங்குடனும், அமைதியுடனும் இருக்க வேண்டும்.

5. ஒரு மாணவருக்கு ஒரு சமயத்தில் ஒரு நூல் மட்டும்தான் கொடுக்கப்படும்.

6. மாணவர்கள் நூலக நூல்களைத் தங்களுக்குள் மாற்றிக்கொள்ளக் கூடாது.

7. ஒப்பிட்டுப் படிப்பதற்கென ஒதுக்கிய நூல்களை நூலகத்திற்கு வெளியில் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட மாட்டாது. ஆசிரியர்கள் அத்தகைய நூல்களை எடுப்பின் தேவை முடிந்ததும் திருப்பிக் கொடுத்து விட வேண்டும்.

8. எடுத்த நூல்களை ஏழு நாட்களுக்குள் திருப்பிக் கொடுத்து விட வேண்டும். அதிகத் தேவையுள்ள நூல்களை உரிய நாள் சுழலுக்கு ஏற்பக் குறிக்கப்பட்ட நாளில் திருப்பிக் கொடுக்க வேண்டும். அந்நாள் விடுமுறை நாளாக இருப்பின் அடுத்த பணி நாளில் அதைக் கொடுத்துவிட வேண்டும். ஒவ்வொரு பருவத் தேர்வுக்கும் கோடை விடுமுறைக்கும் முன்னர் எல்லா நூல்களையும் நூலகத்தில் ஒப்படைத்துவிட வேண்டும்.

9. நூலக நூல்களில் ஏடுகள் கிழிக்கப்படுவதும் எழுது கோலால் கோடிடுவதும் குறிப்பிடுவதும் தண்டனைக்குரிய செயலாகும். அவ்வாறு தவறு நடந்தால் உரிய மாணவரின் உறுப்பினர் கட்டணமோ அல்லது வேறு நூலோ அல்லது இரண்டுமோ தர வேண்டி இருக்கும் என்பதுடன் ஒழுங்கு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும். குறிப்பிட்ட தவணையில் நூல் திருப்பிக் கொடுக்காவிடில் ஒரு பணி நாளுக்கு ஒரு ரூபாய் வீதம் ஒறுப்புக் கட்டணம் வசூலிக்கப்படும். இக்கட்டணத்தை செலுத்தும் வரை அந்த மாணவர் வேறு புத்தகத்தை நூலகத்திலிருந்து பெறமுடியாது.

10. அ) எடுத்த நூலை வேறு ஒருவரும் விண்ணப்பிக்காது இருப்பின் தவணை நாளுக்கு மேலும் வைத்துக் கொள்ளலாம்.

ஆ) அதனை திருப்பிக் கொடுக்க வேண்டிய நாளில் புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.

11. நூலைத் திருப்பிக்கொடுக்க வேண்டிய தவணை நாள் வருவதற்குள்ளாகவே அந்நூல் தேவைப்பட்டால் நூலகர் அதனை எந்த வேளையிலும் கேட்கலாம்.

12. எடுத்துச் சென்றுள்ள எந்த நூலையும் எந்த வேளையிலும் முதல்வர் நூலகத்தில் ஒப்படைக்குமாறு ஆணையிடலாம்.

13. நூலகத்திலிருந்து நூலினைப் பெறும் மாணவர்கள் அந்நூல் பழுதுபட்டிருந்தால் உடனடியாக நூலகரின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும்.

14. நூலகர் நூல்களைக் கவனித்து திரும்பப்பெறும் போது புத்தகங்களில் ஏதேனும் பழுது ஏற்பட்டிருப்பின் அதற்கான கட்டணம் வசூலிக்கப்படும்.

15. புத்தகம் பழுதாக்கப்பட்டிருந்தாலோ அல்லது தொலைக்கப்பட்டிருந்தாலோ புத்தகத்திற்குரிய விலையுடன் புத்தகத்தின் விலையின் இரண்டரை அல்லது நூலின் நிலை கருதி கூடுதலாகவும் பணம் வசூலிக்கப்படும்.

16. மாணவர்களுக்கான செய்தித்தாள்களையும், பிற வார, மாத இதழ்களையும் நூலகத்திலேயே கவனத்துடன் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

17. கல்லூரி ஆசிரியர்கள் நூலகப் புத்தகங்களை 30 நாட்கள் வரை வைத்திருக்கலாம். பிறருக்கு அது தேவைப்படாத பொழுது மேலும் 30 நாட்களுக்குள் அவற்ஂறைப் புதுப்பித்துக் கொள்ளலாம். அவர்கள் ஒரு வேளையில் கல்லூரிப் பாடப்புத்தகங்கள் தவிர வேறு மூன்று நூல்களை மட்டுமே எடுக்கலாம். மாணவருக்குத் தேவைப்படும் நூலகப் புத்தகங்களை ஆசிரியர்கள் நீண்ட காலம் வைத்திருப்பது விரும்பத் தக்கதல்ல.

18. நூல் குறியிடல் கோடிடல் முதலிய வேண்டாத செயல்களை மாணவர்கள் தவிர்த்தல் வேண்டும். நூலகப் புத்தகங்களுக்குச் சிதைவு ஏற்பட்டால் நூலை எடுத்த மாணவரே பொறுப்பாவார். கடனாகப் பெற்ற அனைத்து நூல்களையும் நூலகத்திற்குத் திரும்பி வழங்கி கடனின்மைச் சான்றிதழினைப் பெற்ற பின்னரே மாற்றுச் சான்றிதழ், தேர்வுக்கூட நுழைவுச் சீட்டு ஆகியன வழங்கப்படும்.

அடையாள அட்டை

கல்லூரியில் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் நிழற்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்கப்படும். அடையாள அட்டை பன்னோக்குப் பயனுடையது. அடையாள அட்டையைத் தொலைத்துவிட்டால் ரூ. 50 செலுத்தி வேறு அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

முக்கிய அறிவிப்பு

மாணவர்கள் தினமும் கல்லூரிக்கு வரும்போதும் அலுவலகத்தில் பணம் செலுத்த வரும்போதும் உதவித் தொகைகள் பெறும்போதும் பல்கலைக்கழகத் தேர்வெழுத வரும் போதும் பல்கலைக்கழக மதிப்பெண் சான்றிதழ் பெற வரும் போதும் தற்காலிகப் பட்டச்சான்று, பட்டச்சான்று பெற வரும்போதும் தமது சுழல் எண், தேர்வெண் ஆகிய விவரங்களுடன் கூடிய புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டையை அவசியம் கொண்டு வருதல் வேண்டும்.

நேரடித் தொடர்பு முறை

கல்லூரியில் சேர்க்கப்பட்ட ஒவ்வொரு மாணவரும், ஒரு ஆசிரியரின் பொறுப்பில் விடப்படுவார், பொறுப்பாசிரியரை வாரம் ஒரு முறையாவது அல்லது அவர் குறிக்கும் நாளிலாவது மாணவர்கள் சந்திக்க வேண்டும். அந்நாளில் கல்வியில் மாணவரின் மதிப்பெண் பற்றி உரையாட வேண்டும். மாணவர்களின் தேர்வு மதிப்பெண் பட்டியலைப் பொறுப்பாசிரியர் பெற்றோருக்கு அனுப்புதல் வேண்டும். தேர்வில் குறைந்த மதிப்பெண் வாங்கிய மாணவர்களுக்குக் கூடுதல் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும். தனிப்பட்ட செய்தி தொடர்பாக மாணவர்கள் பொறுப்பாசிரியரிடமிருந்து அறிவுரை பெறலாம்.

உடற்பயிற்சிக் கல்வி

உடற்பயிற்சிக்கென குறித்த வருகை விழுக்காட்டை உடற்பயிற்சி வகுப்புகளில் பெறாத மாணவர்கள் பல்கலைக்கழகத் தேர்வு எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

முக்கிய அறிவிப்பு

மாணவர்கள் கவனத்திற்கு

1. பகடிவதை (Ragging) அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டுள்ளது. நேரிடையாகவோ, மறைமுகமாகவோ, பகடிவதையில் ஈடுபடும் மாணவர்களைச் சமூக விரோதிகள் எனக் கருதி சம்பந்தப்பட்ட மாணவர்கள்மீது கிரிமினல் வழக்குகள் தொடரப்பட்டு மூன்று மாதச் சிறைத் தண்டனையும் ரூ.25,000/- வரை அபராதமும் விதிக்கப்படும். மேலும், இம்மாணவர்கள் கல்லூரியிலிருந்து உடனடியாக நீக்கப்படுவார்கள்.

2. கல்லூரிக்கு வெளியேயும் பொது மக்களிடமிருந்தும் அரசு அனுமதியின்றி மாணவர்கள் பணம் வசூல் செய்வது அரசு விதிகளை மீறிய செயல் என்றும் அறிவிக்கலாகிறது.

கல்லூரிப் பேரவை உறுப்பினர்

1. தலைவர் (President)
2. துணைத் தலைவர் (Vice President)
3. செயலாளர் (Secretary)
4. பொருளாளர் (Treasurer)
5. விளையாட்டு மன்றச் செயலர் (Sports Asociation Secretary)
6. நுண்கலை மன்றச் செயலர் (Sports Asociation Secretary)

பேரவையின் குறிக்கோள்கள்

அ) மாணவர்கள் தங்களது ஆளுமையை வெளிப்படுத்த வாய்ப்புகள் அளித்து அதன் மூலம் தலைமைப் பொறுப்புகளை வகிக்கும் திறமையை வளர்த்தல்.

ஆ) மாணவர்களுக்குப் பல்வேறு போட்டிகளில் பங்கு கொள்ளும் வாய்ப்பு அளித்தல்.

இ) சமூகத்தில் சிறப்புடன் விளங்கும் அறிஞர்களையும், பெரியோர்களையும் கல்லூரிக்கு அழைத்து சொற்பொழிவாற்றச் செய்து அவர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே நல்லுறவை வளர்த்து மேம்பாடு அடையச் செய்தல்.

ஈ) மாணவர்களிடையே சமூக, கலைப்பணிகளைச் செய்யும் ஆர்வத்தைத் தூண்டுதல். கல்லூரிப் பேரவை நடத்தும் எல்லா நிகழ்ச்சிகளிலும் மாணவர்கள் கட்டாயமாகக் கலந்து கொள்ள வேண்டும். மாணவர் தலைவரே பேரவையின் எல்லாப் பணிகளுக்கும் முழுப் பொறுப்பாளியாவார்.